# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை
# கிருஷ்ணகிரி மாவட்டம்

**முன்னிலை : திரு. P. சுந்தரமூர்த்தி, B.Com., LL.M.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஊத்தங்கரை (மு.கூ.பொ.)**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ம் நாள் செவ்வாய்க்கிழமை**

## I.A.No. 10 of 2024 in O.S.No. 70 of 2019
**CNR.No.TNKI13-000120-2019**

1. சாந்தி ...மனுதாரர்கள் / உத்தேச
2. சந்திரமதி பிரதிவாதிகள்

//எதிர்//

1. சுப்பிரமணி ...எதிர்மனுதாரர் / வாதி

2. மாணிக்கம் (இறப்பு)
3. கிராம நிர்வாக அலுவலர், நொச்சிப்பட்டி
4. வட்டாட்சியர், ஊத்தங்கரை
5. வட்டார வளர்ச்சி அலுவலர், ஊத்தங்கரை
6. மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி
7. வேலு ...எதிர்மனுதாரர்கள் /
8. திருமால் பிரதிவாதிகள்

இந்த இடைமனுவானது 08.01.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் செல்வி. S. ஸ்ரீசங்கரி. அவர்களும் மற்றும் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. மூர்த்தி, அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, இந்நாள்வரை ஆய்வில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்:

## உத்தரவு

இம்மனுவானது கட்டளை I விதி 10 சி.பி.சி–ன் கீழ் மேற்படி வழக்கில் உத்தேச மனுதாரர் / உத்தேச பிரதிவாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதி வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுஉரை சுருக்கம்:**

2(i). மனுவில் மனுதாரர், தாவாவில் 1–ம் உத்தேச மனுதாரர். 2–ம் உத்தேச மனுதாரர் மனுதாரரின் தாயார் அவருக்காகவும் இந்த பிரமாணப்பத்திரத்தினை தாக்கல் செய்கிறார். மேற்படி வழக்கினை எதிர்மனுதாரர்/ வாதிக்கு எதிராக, 1–ம் பிரதிவாதியான மனுதாரரின் தந்தைக்கு எதிராக உரிமைவிளம்புகை மற்றும் நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி முற்றிலும் பொய்யான உண்மைக்கு புறமான சங்கதிகளை தெரிவித்து, அதாவது மனுதாரர் ஏற்கனவே மனுதாரரின் தந்தை மற்றும் சகோதரர்களுக்கு எதிராகவும், வாதியின் மனைவிக்கு எதிராகவும் பாக வழக்கு ஒன்றினை சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதை மனதில் வைத்து மோசடியான ஆவணங்கள் அடிப்படையில் வழக்கினை தாக்கல் செய்துள்ளனர்.

2(ii). மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரரின் தந்தை மாணிக்கம் என்பவர் மனுதாரரையும், அவரது தாயார் சந்திரமதி மற்றும் சகோதரர்கள் 6, 7 பிரதிவாதிகளை வாரிசுகளா விட்டுவிட்டு 20.06.2020-ம் தேதியில் இறந்துவிட்டார். மனுதாரரின் தந்தை இறந்த பிறகு அவரது வாரிசுதாரர்கள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க மனுதாக்கல் செய்த மனுவிலேயே மனுதாரரின் சகோதரர்கள் மனுதாரரின்

தந்தையின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்து மனுதாரரும் அவரது தாயாரும் வாரிசுதாரர்கள் தெரிவித்து இருந்ததாகவும், ஆனால் வாதி ஏதோ உள்னோக்கத்தோடு அவரது மனைவி சந்திரமதி என்பவரையும், அவரது மகளான என்னையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காமல் மனுதாரரின் சகோதரர்களை மட்டும் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து வழக்கினை நடத்தி வருகிறார்.

2(iii). மனுதாரரின் சகோதார்கள் மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவித்து பேசிய போதுதான் மனுதாரரையும் அவரது தாயாரையும் விட்டுவிட்டு மனுதாரரின் சகோதரர்களை மட்டும் வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ள விவரம் தெரியவந்து வாதி ஏதோ உள்னோக்கத்தோடு மனுதாரர்களை விட்டுவிட்டு வழக்கினை நடத்தி வருவதால் வழக்கு சொத்தை மனுதாரர்கள் இன்றும் 6, 7 பிரதிவாதிகளோ கூட்டாக அனுபவித்து வருவதால் மேற்படி வழக்கிற்கு மனுதாரர்கள் அவசிய தரப்பினர்கள்.

2(iv). வேண்டுமென்றே விவரம் தெரிந்தும் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் வாதி விட்டுவிட்டு வழக்கினை நடத்தி வருவதால் மனுதாரர்களது உரிமைக்கு கலங்கம் ஏற்பட்டுவிடும் என்பதால் இந்த மனுவினை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. 1-ம் பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசுதாரர்களான உத்தேச மனுதாரர்களான மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க அனுமதி வழங்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1-ம் எதிர்மனுதாரர் / வாதியின் எதிருரை சுருக்கம்:**

3(i). எதிர்மனுதாரர் மனு சங்கதிகளை மறுத்துக்கூறியும், உண்மை சங்கதி என்னவெனில் வாதி 1-ம் பிரதிவாதியின் கள்ள காதலியான சந்திரமதியுடன் கள்ள உறவில் இருந்தும், வேறு ஆண்களுடன் ஏற்பட்ட தகாத உறவின் மூலம் சட்டவிரோதமாக பிறந்தவர் என்பதால் உத்தேச தரப்பினர்கள் வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள். அதனால் உத்தேச எதிர்மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இந்த உண்மையை மறைத்து மனுதாரர்களும், 6, 7 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்துகொண்டு பொய்யான விவரங்களை தெரிவித்தும் மோசடியான ஆவணங்களை வருவாய்த்துறையில் கொடுத்தும் ஒரு பொய்யான தவறான வாரிசு சான்றினை வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளார்கள்.

3(ii). அந்த வாரிசு சான்று உண்மையானதல்ல என்பதனை கனம் நீதிமனக்றத்திற்கு தெரிவிப்பதற்காக மனுதாரர்கள்/உத்தேச வாதி பெற்று வைத்துள்ள வாரிசு சான்று எண் TN720300708182 படி வாரிசு சான்று பெற தாக்கல் செய்த ஆணங்களை பெற எதிர்மனுதாரர்/வாதி கடந்த 10.02.2024 தேதியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வட்டாட்சியர் ஊத்தங்கரை அவர்களுக்கு 2-ம் உத்தேச தரப்பினர் வாரிசு சான்று பெற மனு தாக்கல் செய்தபோது உடன் சமர்பித்த ஆவணங்களை வழங்க கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 25.04.2024 தேதியில் 3-ம் நபர் தகவல் என்பதால் தகவல் அறியும் உரிமை சட்டப்பிரிவு 11-ன்படி தகவல் வழங்கப்படமாட்டாது என பதில் அனுப்பியுள்ளார். அதனாலேயே மனுதாரர்களின் மனு

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

3(iii). மனுதாரர்களின் மனுவில் உண்மை இல்லை. மனுதாரர்கள் அவசிய தரப்பினர்களும் அல்ல. மனுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியமும் இல்லை. வம்சாவழி பட்டியலில் தெரிவித்த விவரப்படி மாணிக்கம் என்பவரின் முதல் மனைவியான பச்சாம்மாள் என்பவருக்கு 6, 7 பிரதிவாதிகள் பிறந்துள்ளனர். பச்சாம்மள் உயிரோடு இருந்த காலத்தில் மனுதாரரின் தாயாரான சந்திரமதியுடன் பிறந்தவர்தான் 1-ம் பிரவாதியான சாந்தி அவார். இந்த உண்மையை மறைத்து மனு தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்களின் மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

3(iv). மனுதாரர் மாணிக்கம், வேலு, திருமால், வசந்தா, சந்திரமதி ஆகியோர்களுக்கு எதிராக ஏற்கனவே பாகம் கோரியும் மற்றும் நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 112/2013 என எண்ணிடப்பட்டு மேற்படி வழக்கில் 1-ம் பிரதிவாதி தனது சாட்சியத்தில் மாணிக்கம் என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றும், மாணிக்கத்தின் மனைவி பச்சியம்மாளுக்கு வேலு, திருமால் ஆகியோர் வாரிசுகள் என்றும் பச்சியம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் திருமணம் நடைபெற்று 20 ஆண்டுகள் வரை குழந்தைபேறு இல்லை என்றும் அதன்பிறகு மனுதாரரின் தாயாரான சந்திரமதிக்கும் மாணிக்கத்திற்கும் மனுதாரர் பிறந்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மோசடியான வாரிசு சான்றில் மனுதாரர் மாணிக்கத்திற்கும் சந்திரமதிக்கும் பிறந்ததாக வாரிசு

சான்றில் குறிப்பிடவில்லை, மற்றும் வேலு, திருமால் ஆகியோர் பச்சியம்மாளுக்கும் மாணிக்கத்திற்கும் பிறந்த விவரத்தை குறிப்பிடாமல் தற்போது எதிர்மனுதாரை ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கில் கூட்டு சேர்ந்துகொண்டு மோசடியான வாரிசு சான்றினை உண்மையை மறைத்து பெற்றுள்ளனர். மாணிக்கத்திற்கும் பச்சியம்மாளுக்கும் முதல் திருமணம் நடைபெற்று அந்த திருமண உறவு நடைமுறையில் இருந்த நிலையில் பச்சியம்மாள் உயிருடன் இருந்தபோதே மாணிக்கத்திற்கும் சந்திமதிக்கும் ஏற்பட்ட தகாத உறவின் மூலம் மனுதாரர் பிறந்ததால் இந்த வழக்கில் மனுதாரர் அவசிய தரப்பினர் அல்ல. அதனால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

3(v). மனுதாரர் வாரிசு சான்று எண் TN720200708112 என மோசடியாக பெறப்பட்டதால் அந்த சான்றில் இணைக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர் விசாரணை அறிக்கையை பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக எதிர்மனுதாரர் கடந்த 26.03.2024 தேதியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு செய்தார், ஆனால் பொது தகவல் அலுவலர் /தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஊத்தங்கரை அவர்கள் மு.மு.378/2024/பி2 05.04.2024 தேதியில் வாரிசு சான்று விவரம் தனிப்பட்ட நபருடையது என்பதால் தகவல் அறியும் உரிமை சட்டம் 11 படி தகவல் வழங்க இயலாது என தகவல் தெரிவித்துள்ளனர். மனுதாரர்கள் தூய்மையான கரங்களுடன் கனம் நீதிமன்றத்தினை அணுகவில்லை. எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன்

தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமாய் எதிர்மனுதாரர் வணக்கமுடன் பிரார்த்திக்கின்றார்.

**4. தீர்வுகாண வேண்டிய வினா:**

4(i). இம்மனுவில் முக்கியமாக தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவென்றால் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்.

**5. சாட்சியம்:**

5(i). இம்மனுவிற்கு மனுதாரர் தரப்பில் சாட்சிகள் எதுவும் முன்னிடப்படவில்லை. மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** என்ற சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5(ii). எதிர்மனுதாரர் தரப்பில் திரு. சுப்பிரமணி என்பவர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை **எ.ம.சா.1** ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். திரு. கோவிந்தசாமி என்பவர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து தன்னை **எ.ம.சா.2** ஆக விசாரித்துக்கொண்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.2** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**விவாதம்:**

6. மனுதாரர் / உத்தேச பிரதிவாதிகள் இந்த அசல் வழக்கின் 1-ம் பிரதிவாதியான இறந்த மாணிக்கத்தின் வாரிசுகள் என்றும், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது கடந்த 20.06.2020 தேதியில் மாணிக்கம் இறந்துவிட்டார். அவரின் வாரிசுகளை சேர்க்க வேண்டி அசல் வழக்கின் வாதி தாக்கல் செய்த மனுவில் 6, 7 எதிர்மனுதாரர்கள் மட்டுமே தரப்பினர்களாக சேர்த்து தாக்கல் செய்துவிட்டு இந்த மனுவின்

மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் வேண்டும் என்றே விட்டுவிட்டார் என்றும், எனவே 1-ம் பிரதிவாதியின் வாரிசு என்ற அடிப்படையில் இந்த மனுவின் மனுதாரர்கள் இவ்வழக்கை தீர்மானிக்க அவசிய தரப்பினர்கள் என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் 2-ம் மனுதாரர் சந்திரமதி இறந்த மாணிக்கத்தின் கள்ளக்காதலி என்றும், 1-ம் மனுதாரர் அவருக்கு வேறு நபர்கள் மூலம் பிறந்தவர் என்றும் மாணிக்கத்தின் வாரிசுகள் இருவரும் இல்லை என்றும், எனவே அவர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் இல்லை என்றும், ஆட்சேபணை செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் இறந்த மாணிக்கத்தின் வாரிசு சான்று ம.சா.ஆ. 1-ஆகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி வாரிசு சான்றில் 1-ம் மனுதாரர் மகள் என்றும், 2-ம் மனுதாரர் மனைவி என்றும் கடந்த 16.07.2020 தேதியில் வட்டாட்சியர் வாரிசு சான்று வழங்கியுள்ளார். முறையான விசாரணைக்குப் பின் வட்டாட்சியர் அவர்களால் வாரிசு சான்று வழங்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மாணிக்கத்தின் வாரிசுகள் இல்லை என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அசல் வழக்கில் 1-ம் பிரதிவாதியின் வாரிசுகளான மனுதாரர்களும் அசல் வழக்கை தீர்மானிக்க அவசிய தரப்பினர்கள் ஆவார்கள்.

8. I.A.No. 08/2023 மனுவை தீர்மானிக்கும்போதே இந்நீதிமன்றம் இந்த மனுவின் மனுதாரர்கள் மாணிக்கத்தின் வரிசுகள் என்று தெரிவிக்கப்பட்டு அதுகுறித்து பரிசீலனை செய்கையில் உரிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அவர்கள் அவசிய தரப்பினர்கள் என்று

முடிவு செய்ய முடியாது என்ற காரணத்தால் மனுதாரர்கள் மாணிக்கத்தின் வாரிசுகள் என்று குறிப்பிட்டுள்ள 6, 7 எதிர்மனுதாரர்களை மட்டுமே வாரிசுகளாக சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் இந்த மனுவின் மனுதாரர்கள் வாரிசுகள் இல்லை என்ற எந்த முடிவையும் இந்த நீதிமன்றம் காணவில்லை. எனவே அது இந்த வழக்கில் மாணிக்கத்தின் வாரிசுகள் குறித்து தீர்வு காணப்படுவதில் எந்த முரண்பாடும் ஏற்படாது. அந்த மனுவில் முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்யாததாலேயே அவர்கள் வாரிசுகளா இல்லையா என்று முடிவு செய்யப்படாமல் மனுதாரர் தாக்கல் செய்தபடி மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

9. தற்பொழுது இந்த மனுவில் மனுதாரர்கள் வாரிசு சான்றை தாக்கல் செய்து தாங்களும் வாரிசுகள் என்று நிரூபணம் செய்துள்ளனர். எனவே 1–ம் பிரதிவாதியின் வாரிசு என்ற அடிப்படையில் மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு இந்த மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கின் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)

**ஊத்தங்கரை**

# இணைப்பு

**மனுதாரர் தரப்பு சாட்சி :** இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 16.07.2020 | வாரிசு சான்றிதழ் | நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:**

எ.ம.சா. 1 : திரு. சுப்பிரமணி

எ.ம.சா. 2 : திரு. கோவிந்தசாமி

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம்:**

| Exhibit | Date | Document | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 26.03.2024 | எதிர்மனுதாரர் வட்டாட்சியர், ஊத்தங்கரை அவர்களுக்கு அனுப்பிய மனு | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 05.04.2024 | வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அனுப்பிய பதில் | அசல் |

Sd/- XXXXX

மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC)
ஊத்தங்கரை